PW 54

நான் தற்போது தஞ்சாவூர் 768- நாகமரத்து சந்து கீழ வீதியில் குடியிருந்து வருகிறேன்- அ.சா.1 தெரியாது . வழக்கின் 1வது எதிரியை தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. கடந்த 11.02.1999 ம் தேதியில் எனது பேரன் ஆனந்த பிரசாத் என்ற பெயரில் ஐயன்கடை தெருவில் உள்ள கணபதி ஜீவ்ல்லரியில் காமதேனு தங்க நகை சிறுசேமிப்பு திட்டத்தில் மாதம் ரூபாய் 150 வீதம் 23 மாதங்களுக்கு மொத்தம் ரூபாய் 3450 செலுத்தினேன். பணம் கட்டிமுடித்த பின்பு நகை எடுப்பதற்காக கணபதி ஜீவ்ல்ரிக்கு சென்று கேட்ட போது அடுத்த மாதம் நகை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள் அடுத்த மாதம் சென்று பார்த்த போது கடை பூட்டப்பட்டு சீல் போடப்பட்டிருந்தது . பின்னர் விசாரித்த போது 1ம் எதிரி கடை பூட்டிவிட்டு சென்று விட்டதாக தெரிந்து கொண்டேன். என் பணத்தை மோசடி செய்த கணபதி என்பவர் மீது மாவட்ட குற்றப்பிரிவில் புகார் அளித்தேன். நான் பணம் செலுத்தி எனக்கு வழங்கப்பட்ட பாஸ்புக்கின் கணக்கு எண் 143 ஆனந்த் பிரசாத் என்ற பெயரில் வழங்கப்பட்ட பாஸ்புக் சா.பொ. 93 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தஞ்சாவூர் ஐயன் கடைதெருவில் கணபதி ஜீவல்லரி என்ற கடையே இல்லையென்றாலும் காமதேனு தங்கநகை சிறுசேமிப்பு திட்டம் என்று எதுவும் இல்லை என்றாலும் நான் முன்விசாரணையில் சொல்லியுள்ளவாறு மேற்படி திட்டத்தில் சேரவே இல்லையென்றாலும் அதே போல் தொகை எதுவும் செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. சா.பொ. 93 இவ்வழக்கிற்கு சம்மந்த படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல . நான் மாவட்ட குற்றப்பிரிவு போலிசாரிடம் எழுத்துப்பூர்வமாக புகார் எழுதி கொடுத்துள்ளேன். போலிஸார் சொல்லிக்கொடுத்தன் பேரில் முன்விசாரணையில் பொய்யாக சாட்சி அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கட்டியதாக சொல்லும் பணத்திற்கு உரிய பரிசு பொருட்களை நான் பெற்றுவிட்டதாக சா.பொ. 93 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை

ஓம்.அ.முகம்மதுஅலி,
நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்.